


# 10.05.2026 செய்திகள்

## புதிய தொழிலாளர் சட்ட தொகுப்பு அரசிதழில் வெளியிட்டது மத்திய அரசு

- தொழிலாளர் சட்டங்கள் எண்ணிக்கையில் அதிகம். எனவே, இதில் உள்ள நடைமுறை சிக்கல்களைகளையும் பொருட்டு, 29 தொழிலாளர் சட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, நான்கு சட்ட தொகுப்புகளாக உருவாக்கப்பட்டன.
- அவ்வகையில் உருவாக்கப்பட்ட ஊதிய சட்ட தொகுப்பு 2019, தொழிலக உறவுகள் சட்ட தொகுப்பு 2020, சமூக பாதுகாப்பு சட்ட தொகுப்பு 2020 மற்றும் தொழிலக பாதுகாப்பு, ஆரோக்கியம் மற்றும் பணிச்சூழல் சட்ட தொகுப்பு 2020 ஆகியவை 2025-ம் ஆண்டு நவம்பர் 21 முதல் நடைமுறைக்கு வந்துவிட்டன.
- தொழிலாளர் சட்டங்களை நவீனப்படுத்துவதும் எளிமைப்படுத்தி, இன்றைய கால கட்டத்துக்கு ஏற்ப மாற்றுவதும் இதன் நோக்கம் ஆகும். இருப்பினும் இவற்றுக்கான விதிகள் இல்லாததால், சட்ட தொகுப்புகளுக்கான விளக்கங்கள் கிடைக்கவில்லை. ஆனால், தற்போது விதிகளும் உருவாக்கப்பட்டுவிட்டதால் இச்சட்ட தொகுப்புகள் இனி முழுமையாக செயல்படுத்தப்படும்.
- இவ்விதிகள் 2025 டிசம்பர் 30 அன்று வெளியிடப்பட்டு, இத்துறையினரின் கருத்துகள் பெறப்பட்டன. புதிய சட்ட தொகுப்புகள், நாட்டில் தொழில் செய்வதை எளிதாக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டவை.

» இனி கட்டாயம்

1. ஒரு குறிப்பிட்ட பொருளை மட்டும் விளக்குவது தனி சட்டம், பல்வேறு சட்டங்களை ஒருங்கிணைத்து உருவாக்குவது சட்டத்தொகுப்பு.
2. புதிய சட்ட தொகுப்புகளின் படி வேலை நியமன கடிதம் கட்டாயமாக்கப்பட்டது.
3. மேலும் 40 வயதுக்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு இலவச மருத்துவ பரிசோதனை, பெண்களுக்கு சம வேலை, சம ஊதியம், வெவ்வேறு ஷீப்ட்களில் பணிபுரிய வாய்ப்பு.
4. வாரத்துக்கு அதிகபட்சம் 48 மணி நேரம்தான் தொழிலாளர்கள் பணியாற்ற முடியும். வேலை நேரத்தை தாண்டி பணிபுரிய நேர்ந்தால் ஓவர் டைம் ஊதியம் கட்டாயம்.
5. வாரம் ஒரு நாள் விடுமுறை கட்டாயமாக்கப்படுகிறது.
6. வேலை இழக்கும் தொழிலாளர்களுக்கு திறன் மேம்பாடுக்காக தேசிய மறு திறன் நிதியம் உருவாக்கப்படும்.

## முப்படைகளின் புதிய தலைமைத் தளபதியாக என்.எஸ். ராஜா சுப்பிரமணி நியமனம்

- நாட்டின் முதல் முப்படை தலைமைத் தளபதியான விபின் ராவத் 2021-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தமிழகத்தில் நடந்த ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்தார். இதையடுத்து, முப்படை தலைமைத் தளபதியாக கடந்த 2022-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அனில் சௌஹான் பதவியேற்றார்.
- அவரின் பதவிக் காலம் இம்மாதம் 30-ஆம் தேதியுடன் நிறைவடைகிறது. இதையடுத்து, அந்தப் பதவியில் லெப்டினென்ட் ஜெனரல் (ஓய்வு) ராஜா சுப்பிரமணியை மத்திய அரசு நியமித்துள்ளது. இவை ஒரே தலைமையின்கீழ் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. அந்தப் பணியை செயல்படுத்தும் பொறுப்பு ராஜா சுப்பிரமணிக்கு இருப்பதாகக் கூறப்படுகிறது.

» புதிய கடற்படை தலைமைத் தளபதி :

- இந்திய கடற்படையின் தலைமைத் தளபதியாக இருக்கும் தினேஷ் கே திரிபாதியின் பதவிக்காலம் இம்மாதம் 31-ஆம் தேதியுடன் முடிவடைகிறது. இதையடுத்து, கடற்படையின் புதிய தலைமைத் தளபதியாக துணைத் தளபதியாக இருந்த கிருஷ்ண சுவாமி நாதனை மத்திய அரசு நியமித்துள்ளது.

SURESH